பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 18 வியாழக்கிழமை (30-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 154

## பொலனறுவயில் அதிரடி; 10 படையினர் உயிரிழப்பு

### அதிவேக தாக்குதலில் ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 30

பொலனறுவ மாவட்டம் அலும்புப்பொத்தான என்னு மிடத்தில் அமைந்துள்ள இராணுவ மினி முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். படையினரின் நான்கு காவலரண்கள் நிர்மூலமாக்கப் பட்டன. அல்டிமிக்ஸ் எல். எம். ஜி உட்பட பல நவீனரக ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

மின்னல் வேகத்தில் —

ஏழு நிமிட நேரம் மட்டுமே நீடித்த இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் பலர் மிக மோசமான காயங்களுக்கு உள்ளாகினர் என்றும்—

பத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

[6 ஆம் பக்கம் பார்க்க]

விடுதலைக்கான அறை கூவல் நாள்:

## மேதின எழுச்சிப் பேரணி நாளை யாழ்ப்பாணத்தில்

### பெரியளவில் ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்பபாணம், ஏப். 30

தொழிலாளர் தினமான மேதினத்தை யாழ். மாவட்ட மக்கள் இம்முறை வெகு எழுச்சியுடனும், உணர்வுபூர்வமாகவும் கொண்டாடுவதற்கு துரிதமாகச் செயற்பட்டுவருகின்றனர்.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் அறை கூவல்கள் சுவரொட்டிகளாகவும், பதாகைகளாகவும் குடா நாடெங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. இம்முறை ''ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்களே ஒன்றுபடுங்கள்'' எனும் கோஷம் மேதின அறைகூவலாக முன்வைக்கப்பட்டுள்ளது. இம்முறை மே நாள் கொண்டாட்டம் விடுதலைக்கான அறைகூவல் நாளாகவும், மக்களது தேசிய எழுச்சி நாளாகவும் அமையும்.

உழைக்கும் மக்களின் எழுச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# வங்காலையிலிருந்து வந்த படையினர் மீது கடுந்தாக்கு!

## குண்டுவீச்சின் மத்தியிலும் புலிகளின் உக்கிரமான மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 30

மன்னார் மாவட்டத்தில் வங்காலை மற்றும் மாந்தை தள்ளாடி முகாம்களில் இருந்து முன்னேறி வந்த படையினரை, சின்ன உயிலங்குளம் என்ற இடத்தில் வழிமறித்து விடுதலைப் புலிகள் கடுந் தாக்குதல் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து மிகப் பரந்த பிரதேசத்தில் விமானப் படையினர் குண்டு வீச்சு நடத்தினர்.

எனினும் கடும் குண்டு வீச்சின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் உக்கிரமான முறையில் தாக்குதல் நடத்திவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

செவ்வாய்க்கிழமை காலை வங்காலை, தள்ளாடி, மாந்தை ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து கவச வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் பெரும் டாங்கிகள் சகிதம் படை அணிகள் பல முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டன.

இப் படை அணிகளை விடுதலைப் புலிகள் சின்ன உயிலங்குளம் என்ற இடத்தில் வழிமறித்து கடும் தாக்குதல் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து

[5 ஆம் பக்கம் பார்க்க]

### வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஏப். 30

வவுனியா மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாகக் கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது.

எனினும் — மன்னார் தீவு தவிர்ந்த மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு தொடர்ந்து அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

### முச்சந்தி முரளி



பழுதாப் போன சரக்கைச் செலுத்த இது தான் சரியான இடம் என்ற நினைப்புப் போல!

### திருமலையில் கிராமம் ஒன்று சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30

திருகோணமலையில் உள்ள களுவே என்ற கிராமத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 26 ஆம் திகதி முதல் அந்தக் கிராமம் படையினரால் பல ... 

[6 ஆம் பக்கம் பார்க்க]

### காங்கேசன் களஞ்சியத்தில் பழுதடைந்த கோதுமை மா!

யாழ்ப்பாணம், ஏப். 30

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திலிருந்து வழங்கப்படும் கோதுமை மாவை ஏற்றுக்கொள்ள செயலக அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

அங்கு விநியோகப்படும் மா பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் —

அது பாவனைக்கு உகந்ததா என்பது குறித்துப் பரிசோதனை செய்யுமாறு வைத்திய அதிகாரியிடம் மாதிரிகள் கொடுக்கப்பட்டுள்ள

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தேநீர்-சைக்கிள் கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 30

மே தினமான நாளை முதலாம் திகதி மேதினப் பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் நலன்கருதி தேநீர்க் கடைகளும், சைக்கிள் திருத்தும் கடைகளும் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் பேரணியில் கலந்து கொள்ளும், மக்களின் வசதிக்காக சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களும்—

பேரணியில் கலந்து கொள்ளும் மக்கள் திரும்பிச் செல்வதற்கு வாகன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான விபரங்கள் நாளைய உதயனில் வெளிவரும் [இ]

## வெலிகந்த கிராமத்தில் 55 முஸ்லீம்கள் கொலை

### படுகாயமடைந்த 17பேர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, ஏப். 30

பொலன்னறுவை மாவட்டம், வெலிகந்தை. அலும்புப்பொத்தலை என்ற முஸ்லீம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத கோஷ்டி ஒன்று நடத்திய தாக்குதலில் — 55 பேர் உயிரிழந்தனர் என்றும், 17 பேர் படுகாயமடைந்தனர் என்றும் ஏஜன்சிச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

படுகாயமடைந்த 17 பேரும் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இனந் தெரியாத கோஷ்டியினர் மேற்படி முஸ்லீம் கிராமத்தில் இரவு நேரத்தில் புகுந்து நித்திரையில் இருந்தவர்களை வெட்டியும், சுட்டும் கொலை செய்தனர் என்றும் —

சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு காணி நீர்ப்பாசன மகாவலி அமைச்சர் காமினி அத்துக் கோறளை, வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், முஸ்லீம் மத கலாசார ராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம். அஸ்வர் ஆகியோர் ஜனாதிபதியின் பணிப்புக்கமைய விரைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலன்னறுவ பகுதியில்

### தமிழர்கள் மீது தாக்குதல்; 30 பேர் பலி! பலர் படுகாயம்!!

கொழும்பு, ஏப். 30

பொலன்னறுவ மாவட்டம், வெலிக்கந்தவுக்கு அருகே யுள்ள கரபோல என்னும் இடத்தில் முஸ்லிம்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் தமிழர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொடேண் எடியுக்கேசன் சென்ரர்

கரவெட்டி.

## DAY CLASS பகல் நேர வகுப்பு

வினா - விடை முறையில் மீட்டல் வகுப்பு
(Paper Class)

அலகு ரீதியாக நடைபெறும்.

Chemistry — திரு. சண்முகசுந்தரம்
Maths — திரு. வேலாயுதம்
Physics — திரு. கணேஸ்

ஆரம்பம்: 05-05-1992
நேரம்: 10-30 காலை

[சி/1960] — நிர்வாகி.

# பாடசாலை பஸ் சேவை

பாடசாலை பஸ் சேவை 04 - 05 - 1992 இல் ஆரம்பமாகிறது.

மருதனாமடம் செல்லும் பாடசாலைகள் மற்றும் யாழ். இந்து மகளிர், வேம்படி மகளிர், சுண்டிக்குளி மகளிர், சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு சேவைகள் நடைபெறும்.

குறிப்பு: 771 இலக்க மினிபஸ் 01 - 05 - 1992 இல் காலை 7 மணி தொடக்கம், மாலை 5 மணி வரை நடைபெறும் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகிறோம்.

தொடர்பு கொள்ளும் முகவரி:

சோமசுந்தரம் கடை,
சுதுமலை சின்மயா பாரதி வித்தியாலயம்,
சுதுமலை.

[20776]

சகல கோத்தணி அதிபர்கள்
கவனத்திற்கும்

பாடசாலை மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

உதயன் வெளியீட்டகத்தினர் யாழ் பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்துவதாக அறிவித்துள்ளனர்.

இந்தப் போட்டியில் கொத்தணி மட்டத்தில் தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்து பங்கு கொள்ள வைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உங்கள் கொத்தணியின் கீழ் உள்ள சகல பாடசாலைகளிலும் ஒரு பூர்வாங்கத் தேர்வு நடத்தி தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டு 9, 10, 11 மாணவர்கள் ஒரு பிரிவாகவும், ஆண்டு 12, 13 மாணவர்கள் மற்றொரு பிரிவாகவும் தேர்வு நடத்தப்பட வேண்டும்.

போட்டியில் கீழ்க் காணும் விடயப் பரப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. தமிழ் 2. வரலாறு
3. சமூகவியல் 4. பொருளியல்
5. கல்வி / கலை / விஞ்ஞானம்

ஒவ்வொரு பிரிவிலும் கொத்தணி மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நேரில் தோற்ற வேண்டிய இறுதித் தேர்வு நடைபெறும். இடமும் திகதியும், பின்னர் அறிவிக்கப்படும்.

கொத்தணி மட்டத்தில் தெரிவான மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுவதோடு, முதலாம் இடத்தைப் பெறும் மாணவருக்கு பெறுமதியான பரிசிலும் உதயன் நிறுவனத்தாரால் வழங்கப்படும்.

தெரிவான மாணவர் பெயர் விபரங்களை மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

1. சி. வேலாயுதம், கோ. க. ப. யாழ்ப்பாணம்
2. இ. சிவானந்தம், கோ. க. ப. மருதனார்மடம்.
3. சி. வே. மகேசவேலு. கோ. க. ப. பண்டத்தரிப்பு.
4. சி. புலேந்திரன், கோ. க. ப. வேலணை.
5. பொ. சிவகுருநாதன், கோ. க. ப. சாவகச்சேரி
6. செ. செல்லத்துரை. கோ. க. ப. பருத்தித்துறை.

# உதயன் சேவை நிலையம்

சுன்னாகம்.

வலிகாமம் வடக்கு வாழ் மக்களே!

உதயன் தலைமைப் பணியகத்தில் நீங்கள் செய்ய வேண்டிய சகல அலுவல்களையும் சுன்னாகத்திலேயே செய்து கொள்ளலாம்!

இந்த வெயில் வேளையில், வாகனப் போக்குவரத்து இல்லாத காலத்தில் உங்கள் பிரயாணக் கஷ்டங்களையும், ஏனைய சிரமங்களையும் தவிர்க்க

சுன்னாகம் உதயன் சேவை நிலையத்துக்கு வாருங்கள்

★ விளம்பரங்கள், செய்திகள்
★ தமிழ், ஆங்கில தட்டெழுத்து வேலைகள்,
றோணியோ பிரதி செய்தல்
★ கவர்ச்சியான அச்சு வேலைகள்

எதுவானாலும் உடன் நாடுங்கள்:

## உதயன் சேவை நிலையம்,

82, கே. கே. எஸ். வீதி,
(ப. நோ. கூ. ச தலைமைச் செயலகத்திற்கு அருகாமையில்)
சுன்னாகம். [சி-1963]

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்

# ஏல விற்பனை

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தின் கிளை இல 5 இல் பழுதடைந்த அரிசி, மாவு, சௌபி ஆகியன 09 - 05 - 92 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

பதில் பொது முகாமையாளர்.

[C/2244]

# தவறிவிட்டது

செல்லத்துரை வள்ளியம்மை ஆகிய நான் 27 - 04 - 1992 ஆம் திகதி கொம்படியில் இரவு 7-00 மணியளவில் எனது கைப்பை முக்கிய ஆவணங்கள், பணம் மற்றும் அடையாள அட்டை இல. 566781271V என்பவற்றுடன் தவறவிட்டு விட்டேன்.

மேற்படி ஆவணங்கள் அடங்கிய எனது கைப்பையை கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

[20782]

# தேவை

இணுவிலில் இயங்கி வரும் ஆடைகள் உற்பத்திசெய்யும்தொழிற்சாலைக்கு துணி வெட்டுபவர் [பெண் - கட்(டர்) தேவை.

பெண்களின், சிறுவர்களின் நவீன ஆடைகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவராகவும், தையற்காரராகவும் இருத்தல் வேண்டும்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-05-92 இற்கு முன் விண்ணப்பிக்கவும். C/o 402, நாவலர் வீதி, உதயன்.

[20780]

உர்[illegible]த்தி
உயிருக்கு பெருநாடி

# பட்டதாரி பயிற்சி ஆசிரியர் பதவி:

## பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஏப். 30 கடந்த மார்ச் மாதம் நடந்த பட்டதாரி பயிற்சி ஆசிரியர் பதவிக்கான போட்டிப்பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளிவரும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் கல்விச் சேவைகள் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பின்னர் அவை பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து தகுதி, இன விகிதாசார அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## சிரமதானம்

பரியோவான் கல்லூரி இன்றரக் கழகத்தினர் கடந்த திங்கட்கிழமை கைதடி அரசினர் முதியோர் இல்லப் பகுதியில் முழு நாள் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.

கிணறுகள் இறைத்தல், முதியோரின் இருப்பிடங்களைத் துப்புரவு செய்தல் போன்ற பல்வேறு பணிகளை இவர்கள் நிறைவு செய்தனர்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
02 - 10 - 62

இறப்பு:
03 - 05 - 89

★

திதி: 30 - 4 - 92

## நாகராசா - தெய்வேந்திரம்

[யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞானபீடம்]

அன்பின் மகனே! உடன்பிறப்பே!!
எங்களுடன் வாழ்ந்து வந்து
எண்ணங்கள் பல செய்து வந்து
பல்கலைகள் கற்று வந்து
பல்கலைக்கழகம் சென்று வந்து
பரீட்சையில் சித்தி எய்தி
பலரையும் விட்டுச்சென்று விட்டாய்
மூன்றாண்டு சென்றாலும் உன்தன்
முன்னைய நினைவுகள் மறையவில்லை

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, உடன்பிறப்புக்கள்,
உறவினர்கள்.

வர்காவற்றுறை கிழக்கு. [20765]

# சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

## மென்பந்து கிண்ண கிரிக்கெட்

முதல் சுற்று ஆட்டங்களின் விவரம்

| திகதி | மோதும் அணிகள் | மைதானம் |
|---|---|---|
| 02-05-1992 | பற்றீஷியன் அணி எதிர் மல்லாகம் இ. அ. ச. அணி | மத்திய கல்லூரி |
| | கொக்குவில் ம. ச. ச. நி. அணி எதிர் அரியாலை மத்திய வி. க. அணி | சென். பற்றிக்ஸ் |
| 03-05-1992 | ஷப்றா அணி எதிர் சென்றலைட்ஸ் சொக். அணி | மத்திய கல்லூரி |
| | ஜொலி ஸ்ரார்ஸ் அணி எதிர் ஸ்கந்தா வி. க. அணி | சென். பற்றிக்ஸ் |
| 09-05-1992 | ஜொனியன்ஸ் அணி எதிர் ஸ்ரான்லி அணி | சென். பற்றிக்ஸ் |
| 10-05-1992 | பல்கலைக்கழக அணி எதிர் கிறிஸ்கொப்பர்ஸ் அணி | சென். பற்றிக்ஸ் |

சென்றலைட்ஸ் வி. க.
[சி/1962]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு பூனைகளை வளர்த்தோரே இன்று குற்றம் சுமத்துகின்றனர்!

## இரத்தினபுரி கூட்டத்தில் பிரேமா

கொழும்பு, ஏப். 30

''கறுப்பு பூனைகள்'' குழு தொடர்பாக இன்று சிலர் என் மீது குற்றம் சுமத்துகின்றனர். ''கறுப்புப் பூனைகள்'' தொடர்பாக எனக்கு ஒன்றுமே தெரியாது. அதனை வளர்த்து விட்டவர்களே இன்று குற்றம் சுமத்துகின்றனர்.

இப்படிக் கூறினார் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா.

அண்மையில் இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''தேசிய பாதுகாப்பிற்கு அன்று யார் பொறுப்பாக இருந்தார்களோ அவர்களே ''கறுப்புப் பூனை'' விவகாரத்துக்குப் பொறுப்பு — பெரிய கறுப்பு பூனையை தமது மடியில் வைத்துக் கொண்டு அவர்கள் பால் ஊட்டுகிறார்கள்.

நான் ஒருபோதும் "கறுப்புப் பூனை''களை எனக்கு அருகில் கொண்டு வரவில்லை.

இந்த அரசாங்கம் செயற்படுத்திவரும் திட்டங்கள் காரணமாக வசதி படைத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மிகவும் சிறிய எண்ணிக்கையினரான அவர்கள் அனைவரும் இன்று ஒன்று சேர்ந்து இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க சதி செய்கின்றனர்— என்றார். (ஓ-3)

## கைப்பணி கலைஞருக்கு ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு, ஏப். 30

கைப்பணிக் கலைஞர்களுக்கென ஒய்வூதியத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. நாடெங்கிலும் சுயதொழில் முயற்சியாக கைவினைப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் 1லட்சம் பேர் இதனால் பயனடைவர்.

ஒய்வூதியத்திட்டத்திற்கான நகல் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி தேசிய கைப்பணிச் சபையிடம் கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பணித்துள்ளார்.

[ஓ-10]

## பெண் மரணம்

இரு வாரங்களுக்கு முன்னர் தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பெண்ஒருவர் கடந்த ஞாயிறு அன்று மரணமானார்.

காரைநகர் பலகாடு என்ற இடத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த கபிலரட்ணம் தவமணி [வயது 40] என்பவரே மரணமானவர் ஆவார்.

[இ-15]

## சென்னையில் சிகிச்சை

சென்னை, ஏப். 30

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைதாகி செங்கற்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தைசேர்ந்தவர் எனக் கூறப்படும் சின்னசாந்தன் என்பவர் சென்னை பெரியாஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [த]

---


# உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

B. A. 92/93 — 8 மணி
G. A. Q. 92/93 — 2 மணி

26 - 04 - 1992 முதல்
ஆரம்பமாகிவிட்டது.

தமிழ் திரு. குழந்தை

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

[சி-1954]


---


ஏழாலை - வசந்தபுரம்

## வசந்த நாகபூஷணி அம்மன் ஆலய

# மண்டலாபிடேக பூர்த்தி விழா

ஆங்கிரச சித்திரை 19 ஆம் நாள் வெள்ளி (01 - 05 - 1992) பூர்த்தி விழா நடைபெறும்.

காலை 7 மணி — மகா சங்காபிடேகம் விசேட பூஜை, பிரார்த்தனை, பஜனை

முற்பகல் 11 மணி — ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் மேல் பாடப்பட்ட
திருஊஞ்சல் பாமாலை நூல் வெளியீட்டு வைபவம்

[ஆக்கம்: கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்]

12 மணி — திருஊஞ்சல் நிகழ்ச்சி

★ சிறப்புச் சொற்பொழிவு, தவில் நாதஸ்வரக் கச்சேரி, இன்னிசைக கச்சேரி என்பனவும் இடம்பெறும்.

★ ஊனமுற்ற இருவருக்கு தேவஸ்தானம் சார்பில் அருள்மிகு அம்மன் தாயாரால் முச்சக்கரவண்டிகள் வழங்கப்படும்.

★ அன்னதானமும் நடைபெறும்.

[20771]


---


# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 06 — 1916

உதிர்வு: 12 — 05 — 1991

## அமரர் இளையதம்பி சினிவாசகம்

[ஆயுர்வேத வைத்தியர்]

திதி 30 - 04—1992

பாசம் மிக்க எமது தந்தையின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

சட்டநாதர் றோட்.
திருநெல்வேலி கிழக்கு.

[20650]


---


# PITMANS

(London)

SHORT - HAND & TYPING

வேலை செய்யும் மாணவர்கள் பலரின் வேண்டுகோளுக்கமைய

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்:
02 — 05 — 1992

விவரங்களுக்கு:

School of Business Administration

16, 3rd Cross Street,
Jaffna.

[இ-2236]


---


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



## இராசரத்தினம் தவநேசன்

தோற்றம்: 08—10—1953

அழிப்பு: 13—05—1989

ஆண்டு மூன்றாகிடினும், உம் நினைவு நம் மனதை விட்டகலாதையா!

இந் நாளில் உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

சூராவத்தை,
சுன்னாகம்.

[20558]


---


# 2ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



வேலணை கிழக்கு

## செல்வி சரண்யா மாணிக்கவாசகர்

ஆனந்தக் கடலில் ஆழ்த்தி மலர்ந்தது: 26 — 09 — 1985

ஆற்றொணாத் துயரில் ஆழ்த்தி மறைந்தது: 30 — 04 — 1990

கண்கள் சிந்தும் கண்ணீர் எமது
கவலையை ஆற்றாது காலம்
எங்கள் நெஞ்சில் உன் நினைவை
நீக்கவும் முடியாது பிரிவு (த்)
துன்பம் வாட்டும் துயரினை எமக்குத்
துடைத்திட வழியேது மகளே!
இன்பம் மீண்டும் பிறக்கும் எம் வாழ்வில்
இரங்கி நீ வரும்போது.

என்றும் உன் நினைவாக
ஏங்கித் தவிக்கும் பிரியமுள்ள:

அப்பா, அம்மா, தம்பி,
உறவினர்கள்.

ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

[20779]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C. R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[20681]

## மணமகள் தேவை

பிரான்சில் தொழில் புரியும், வடமராட்சியைச் சேர்ந்த, 33 வயதுடைய, நல்ல ஒழுக்கமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே தகைமையில் மணமகள் தேவை. திருமணத்தைத் தீர்மானிக்கச் சீதனம் தடையாகாது. திருமணம் இங்கு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். இல. 839, C/o உதயன், யாழ்ப்பாணம். [சி-2231]

## திருமண சேவை

இந்துக் குடும்பம், அழகிய பெண் (29), A/L ஆசிரியைக்கு (பாவம் 55 – செவ்வாய் - 8, அவிட்டம்) பட்டத்துடன் உயர் தொழில் / உத்தியோகமுடைய மணமகன் எதிர்பார்க்கப்படுகிறார். மணப் பொருத்தத்துக்கான ஜாதகங்கள் – தகவல்கள் பரிவர்த்தனை நிலையம், 03, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். [4807]

## இலவச திருமண சேவை

வயது 31, பூசம், செவ்வாய் 1, I. C. M. A - II சித்தியுடன் U. K இல் தொழில் புரிபவருக்கு U. K மணமகள் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில், து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4802]

## 92 ஆம் ஆண்டுக்கான

**வினா-விடை வகுப்பு**

**(PAST PAPERS)**

ஆரம்பம்:

**02-05-1992**

இரசாயனவியல் —
Mr நாகரத்தினம் B. Sc.
Sat. & Sun 12—1 p m.

பௌதிகவியல் —
Mr. ஜெயசீலன் B.Sc.
Sat. & Sun 1—2 p m

தூய/பிரயோக கணிதம்
Mr. கணேசன் B.Sc
Sat. & Sun. 2—4 p. m

## 93

**அசேதன இரசாயனம்**

ஆசிரியர்:
Mr. நாகரத்தினம் B.Sc.

பிரிவு-I Sat. & Sun.
6-00 — 7-30 a.m.

பிரிவு - II Sat. & Sun.
9-30 — 11 a.m.

**'A' LEVEL CENTRE**

பருத்தித்துறை வீதி,
1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[சி-2237]

## மணப்பெண்கள் தேவை

சைவ போசன குற்றமுள்ள 37 வயது வங்கியாளருக்கும், 42 வயது எக்கவுண்டனுக்கும், குற்றமற்ற 28 வயது பட்டதாரிக்கும், 34 வயது கிராம சேவையாளருக்கும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20762]

## மணமகன் தேவை

33 வயது நிரம்பிய பரணி, 4 இல் செவ்வாய், 34/16 கிரக பாவமுள்ள மணப் பெண்ணுக்கு மணமகன் தேவை. தொழில் முக்கியமல்ல. இருவரையும் கனடாவுக்கு அனுப்ப முடியும். சீதனம் கொடுக்கப்படும். ABCDE விவாகப் பொருத்துனர், 20, கண்டி வீதி, சுண்டிக்குளி.

[20778]

## தாதியர் பயிற்சி நெறி (PVT)

தாதியர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் 3-5-92க்கு முன் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ''பிரசாந்தி'' 10/5 சிவன் கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

[20717]

## உயர்கலைக் கல்லூரி

**ஆனைப்பந்தி.**

(கல்விப் பகுதியினரின் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறாத சிரேஷ்ட பாடசாலை)

**O/L பகல் முழு நேர வகுப்புக்கள்**

**ஆரம்பம: 04 - 05 - 1992 காலை 8 மணி**

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-1957]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**டாக்டர் ந. விஜஜேந்திரன் (ஜே. பி.)**

(யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியும், அகில இலங்கை சமாதான நீதிபதியும்)

மண்ணில்: **02 — 07 — 1944** விண்ணில்: **18 — 04 — 1989**

**திதி: 30 — 04 — 1992**

ஆண்டு மூன்று சென்றபோதும் உன் பிரிவுத் துயர் ஆறவில்லையே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி - விமலா விஜஜேந்திரன்,
பிள்ளைகள் - ஜனகன், ஜெயந்தன்
[illegible]

'சிவஸ்தான்',
நல்லூர், யாழ்ப்பாணம்.

[20777]

## 1 ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு
04
—
01
—
1967



உதிர்வு:
30
—
04
—
1991

செல்வன்

**செபமாலை பவளறாயன்**

பன்னிரண்டு பறந்தோடி விட்டாலும்
பழைய நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
கலகலப்பான பேச்சும் உன் வதனமும்
எம் மனக்கண்ணில் நின்று நிழலாடுகின்றன
பவளம் என்றவுடன் பாய்ந்தோடி வந்திடுவாய்
பாசம் நிறைந்த மகனே! எங்களை மறந்தோடி விட்டாயா!
ஒட்டிக்கென்று சென்று அன்னியரின் கையால்
ஆழ்கடல் மீதினில் கொன்று விட்டார்களா!
ஆண்டொன்று சென்றாலும் எங்கள்
அன்புக் கண்ணீரோ வற்றாதையா!

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அண்ணன், அக்காமார்,
தம்பி, தங்கைமார்,
அத்தான்மார்.

மண்டைதீவு,
3 ஆம் வட்டாரம்.

[20774]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். சார்ள்ஸ்**

**(குமாரகுலசிங்கம் வேலவன்)**

வீர ஜனனம்: **31—07—1967** வீர மரணம்: **30—04—1988**

களம் பல கண்ட வேங்கை
குமாரகுலசிங்கம் வேலவன்
வேலா என்று அழைப்போம் நாங்கள்
சார்ள்ஸ் அவன் இயக்க நாமம்
தமிழின விடுதலைக்காய்
தம்முயிர் டணயம் வைக்கும்
மாவீரரில் ஒருவனாக
மாற்றானை மல்லாவியில்
கதிகலங்க வைத்து
களப்பலி ஆகி விட்டான்!
தமிழீழம் தோன்றும் போது
தரணியில் பிறப்பான் மீண்டும்.

உன் பிரிவால் வாடும்;

அம்மா, அக்காமார், அண்ணன்மார்,
மைத்துனர், மைத்துனிகள், மருமக்கள்,
பெறாமக்கள் மற்றும் உற்றார்,
உறவினர்கள்.

வாளித்தொழிற்சாலை ஒழுங்கை,
மாவிட்டபுரம்.

[20556]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சனநாயகக் குளறுபடி

தமிழகத்தில், ஜெயலலிதா அரசு பதவிக்கு வந்த பின்னர் பல பாதகமான 'புதுமைகள்' நடந்து வருகின்றன!

அந்த வகையில், பத்திரிகையாளர்களைத் தண்டிப்பதிலும், பழி வாங்குவதிலும் தமிழக சட்டசபை இப்போது வெகு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

சட்டசபையின் சிறப்புரிமைகளை மீறும் விதத்தில் செய்தியாளர் ஒருவரும், பத்திரிகை ஆசிரியர்கள் இருவரும் பத்திரிகைகளில் எழுதியிருந்தார்கள் என்று கூறி அவர்களைத் தண்டிக்க தமிழக சபாநாயகர் உத்தரவிட்டார்.

ஆனால் அவர்கள் சட்டசபைக்குச் செல்லாமல் நீதிமன்றத்துக்குப் போனார்கள். நீதிமன்றம் சபாநாயகரின் உத்தரவை இடைநிறுத்தம் செய்து உத்தரவு பிறப்பித்தது.

மக்கள் பிரதிநிதிகள் மன்றம், நீதிமன்றம், பத்திரிகைகள் என்பன சனநாயகக் கட்டமைப்பில் முக்கியமான நான்கு தூண்களில் மூன்றாகும். தமிழகத்தில் இந்த மூன்று நிறுவனங்களும் தொடர்புபட்ட முறையில் பிரச்சினை எழுந்துள்ளது.

மக்களுக்குச் சொல்லியிருக்கக் கூடாத தகவல்களை வெளியிட்டதாக, அல்லது மக்களவையை அவமதிக்கும் முறையில் வெளியிட்டதாகக் கூறி, சட்டசபை தனக்குள்ள சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி பத்திரிகையாளர்களைத் தண்டிக்க முனைகிறது.

பத்திரிகையாளர்கள், தம்மைப் பாதுகாக்கக் கோரி நீதிமன்றத்திடம் நீதி கேட்டனர். ஆனால் நீதி மன்றத்தைவிட, சட்டசபையே மேலாண்மை உள்ளது என்று தமிழக சபாநாயகர் சொல்கிறார்.

அதனால், நீதிமன்றத்தின் மூலம் பிரஜை ஒருவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலை தோன்றியிருக்கிறது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்பதற்காக சட்டசபை உறுப்பினர்கள், நீதிமன்றத்தையும் மீறி எவரையும் பழிவாங்கலாம் என்ற நிலைப்பாடும் இதன் மூலம் உருவாகிறது!

சட்டசபையின் அதிகாரம், பத்திரிகைச் சுதந்திரம், நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் ஆகியவற்றுக்கிடையே பெரிய முரண்பாடுகளும் போட்டிகளும் எழுவதை இங்கே காணமுடிகிறது.

மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், சிறப்புரிமை என்ற போர்வையால் மூடி சட்டசபை தப்பித்துக் கொள்ள இடமிருக்கிறது!

நீதிமன்ற உத்தரவைவிட சபாநாயகரின் உத்தரவு மேலாண்மை உள்ளது என்றால் நீதிமன்றத்தின் மதிப்பு, மகிமை என்னாவது? மக்களுக்குச் செய்தியைத் தெரிவிக்கும் பணியில் பத்திரிகையாளர் சிறப்புரிமையை மீறினரா இல்லையா என்பதை கண்டறிந்து தீர்ப்பு - நீதி - வழங்கும் பொறுப்பு நீதிமன்றத்திடம் இருந்து பறிக்கப்படுகிறது!

சனநாயகத்தின் குளறுபடி இங்கே வெளிப்படையாகத் தலைகாட்டுகிறது.

---

★ யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு

# ரூ. 3½ கோடி பெறுமதியான உபகரணங்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குத் தேவையான மூன்றரைக்கோடி ரூபா பெறுமதியான போதனை உபகரணங்கள் கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட போதனை உபகரணங்களே 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்டன.

அவை நேற்று முன்தினம் கல்வி அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

7 தையல் இயந்திரங்கள், 53 வானொலிப் பெட்டிகள், 89 தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் கரும்பலகை, சோக் வகைகள், மண்வெட்டிகள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற பொருள்களும் —

கிராமப்புறப் பாடசாலைகளுக்கான 'மினி ஆய்வுகூடத் தொகுதி''கள் ஆறும் கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

இந்த ஆறு தொகுதிகளும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு பாடசாலை என்ற ரீதியில் ஆறு பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு தொகுதியும் 85 ஆயிரம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்பட்டது.

வந்து சேர்ந்த உபகரணங்களை பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் செய்துள்ளார். [ஓ-3]

## தனியார் வங்கி ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

கொழும்பு, ஏப். 30

தனியார் வர்த்தக வங்கிகளில் பணியாற்றும் சுமார் 8 ஆயிரம் ஊழியர்களுக்கு 27 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும்.

வர்த்தக வங்கி ஊழியர்களின் 3 கோரிக்கைகள் தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மேற்படி தகவல்களைத் தெரிவித்துள்ளது. [ஓ-த]

## சிறிமாவை பத்துமுறையும் தோற்கடிக்க நான் தயார்

### அம்பாந்தோட்டையில் பிரேமா

என்னிடம் ஒருமுறை தோற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நான் பத்து முறையும் தோற்கடிக்கத் தயாராக இருக்கின்றேன்.

அம்பாந்தோட்டையில் அண்மையில் நடைபெற்ற ஐதேக மாநாட்டில் பேசும் போது ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மஹரகம, அம்பாறை ஆகிய இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றபோது அது ''கறுப்புப் பூனை''களின் செயல் என்று திருமதி பண்டாரநாயக்கா கூறினார்.

அந்தப் பெரிய ''கறுப்புப் பூனைகள்'' ஒழிந்திருப்பது அவரிடம் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார். [ஓ-த]

## தமிழிசை விழாவுக்காக நல்லூர் எழிற்கோலம்

யாழ்ப்பாணம், ஏப். 30

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் இசைக் கலைஞர்களை இணைத்து நடத்துகின்ற தமிழிசை விழாவுக்காக நல்லூர் கந்தசாமி கோவிலைச் சுற்றிய பகுதிகள் எழிற்கோலம் பூணுகின்றன. எங்கும் விழாவுக்கான சுவரொட்டிகளையும், பதாகைகளையும் காணக் கூடியதாக உள்ளது.

நல்லூர் வடக்கு வீதியில் அழகான கலையரங்கம் உருவாகி வருகின்றது. மின் இணைப்புகளும், ஒலிபரப்புச் சாதனங்களும் ஏற்படுத்தப் படுகின்றன.

குடாநாட்டிலிருந்தும், ஏனைய மாவட்டங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் விழாவுக்கு வந்து கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால அவர்களின் வசதிகள் கருதி பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

விழாவுக்கு வரும் மக்களின் தேவைகளையும், ஒழுங்குகளையும் தமிழீழக் காவல் துறையினரும், பொது அமைப்புத் தொண்டர்களும் ஏற்படுத்திக் கொடுப்பார்கள்.

எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி புதன்கிழமை வரையிலான 5 தினங்களும் தினசரி மாலை 5 மணிக்கு தமிழிசை விழா ஆரம்பமாகி இரவு 11 மணிக்கு முடிவுறும்.

தமிழீழத்தின் நூறு இசைக் கலைஞர்கள் பங்கேற்கும் பேறுடைய பெருவிழாவுக்கு இசை விரும்பிகளையும், தமிழ் உணர்வாளர்களையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் அழைப்பு விட்டிருக்கின்றது. [ஓ]

## நாளை தேர்

யாழ்ப்பாணம், ஏப். 30

திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி கோவில் (சிவன் கோவில்) தேர்த்திருவிழா நாளை (வெள்ளி) காலை 8 மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 7 மணிக்கு நடைபெறும். [ஓ]

## எரிகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 30

உயரத்தில் இருந்த குப்பி விளக்கு தவறி விழுந்ததால், படுக்கையில் இருந்த குடும்பப் பெண் ஒருவர் தீப்பற்றி உடல் முழுவதும் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார்.

புதுக்குடியிருப்பு கேப்பாபுரத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மரியநாயகம் மரியநாணி [வயது 45] என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளானவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஓ-15]

## மே தின புரட்சியினூடாக புதிய வரலாறு படைப்போம்

### பல்கலை. மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 30

மே தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ''மேதினம் புரட்சியினூடாக புதிய வரலாறு படைப்போம்'' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் சில பகுதிகள் வருமாறு:-

தமிழீழத்திலே இன்று கொண்டாடப்படும் மேதின மானது சகல தொழிலாளர்களும் சகல மக்களும் ஒரு தலைமையின் கீழ் அணிதிரண்டு அடக்குமுறை இயந்திரத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் ஓர் ஒப்பற்ற தினமாக அமைகின்றது.

உழைப்பின் மேன்மையையும், உழைக்கும் மக்கள் பற்றியும் மெச்சிக் கொண்டாடும் இந்நாளில் உழைக்கும் பெண்கள் குறித்து புதியதோர் சிந்தனையும், விழிப்பும் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். பெண்கள் தொடர்ந்தும் மலிவான உழைப்புச் சக்தியாக பயன்படுத்தப்படுகின்றனர். இம் மேதினத்தில் பெண்களின் சகல விதமான உழைப்புப் பற்றியும், அவர்கள் மத்தியில் புரட்சிகர உணர்வை வளர்த்தெடுப்பது பற்றியும் சமூகத்தின் சகல முற்போக்கு சக்திகளும் சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

தமிழீழத்திலே புதிய வரலாறு படைக்கும் இன்றைய நாளிலே, அகிலம் முழுவதும் தொழிலாளர் வர்க்கம் மேன்மையடைய வேண்டும் என்ற கார்ள்ஸ் மார்க்சினதும், பிரெட்ரிக் ஏங்கல்சினதும் கனவுகள் நனவாகட்டும். பாட்டாளித் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் வெற்றியடையட்டும். [ஓ]

## யுத்தக் கைதிகள் 41 பேரை விடுவிக்க புலிகள் நிபந்தனை

### பிக்குமார் கொழும்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகள் 41 பேரையும் விடுதலை செய்வதாயின், பாதுகாப்புப் படையினர் பிடித்து வைத்திருக்கும் 41 விடுதலைப்புலிகள் போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று புலிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பௌத்த குருமார் குழுவினர் இவ்வாறு கூறியதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த 41 பேரில் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை தொடர்பாக கைதான ஒருவரும் அடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-த]

## வங்காலையிலிருந்து..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமானப்படையினரால் சின்ன உயிலங்குளம் பகுதி தொடக்கம் வட்டக்கண்டல் கிழக்கு, பரப்புக்கடந்தான், பரப்பக்கண்டல், 11 ஆம் கட்டையடி ஆகிய கிராமங்கள் வரை மிகப் பரந்த பிரதேசத்தில் கடும் குண்டு வீச்சு மற்றும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

செவ்வாய்க்கிழமை முழுநாளும் கடுமையான வான்த் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விமானப் படையினரின் அகோரக் குண்டு வீச்சினால் பரப்புக் கடந்தான், பரப்பக் கண்டல், 11 ஆம் கட்டையடி ஆகிய பகுதிகளும்—

வட்டுப் பித்தானை, புதுக்காடு, நொச்சிக்குளம், கன்னிக்கட்டைக்காடு ஆகிய பகுதிகளும் பெரிதும் பாதிப்படைந்தன. இதனால் பல மக்கள் இடம்பெயர்ந்தனர்.

வட்டுப்பித்தானைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்கு அஞ்சி, இடைநேரத்தில் ஓடிக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

துப்பாக்கிச் சூட்டினால் காயமுற்ற மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மைக்கேல் சத்தியராசா (40 வயது), அந்தோனி பிரளீஸ் (66 வயது), சந்தியோகு தயாளி (23 வயது) ஆகிய மூவருமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் விமானத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் இராணுவ அணிகளை நகரவிடாது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியதாக நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. [அ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பையா நாகம்மா

ஆறுகால்மடம் புது வீதியைச் சேர்ந்த திருமதி சுப்பையா நாகம்மா காலமானார். இவர் நா. சுப்பையாவின் அன்பு மனைவியும், தியாகராசா [கொழும்பு], காலஞ்சென்ற பத்மநாதன், பரமேஸ்வரி, பாலேந்திரா [லண்டன்], செல்வி பாலசற்குணதேவி, சிவபாலசூரியர் [பவா - ஜேர்மனி], செல்வி சந்திரகலா [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராசா [கொழும்பு கோர்பரேசன் முகாமையாளர்], தர்மதேவி, கலாமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேன், நிசானி, அவாரகன், பிருந்தா, கவுதமன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [30-04-1992] காலை 10 மணி அளவில் புது வீதி ''கலா வாசத்'' தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சுப்பையா.

புது வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[4811]

### செல்லமுத்து அந்தோனிப்பிள்ளை

செல்லமுத்து அந்தோனிப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் [ஓய்வு பெற்ற அரசினர் வைத்தியசாலை ஊழியர்-பூநகரி] அருமை மனைவியும், அ. செபஸ்தியாம்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியர் - சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை], காலஞ்சென்ற அ. பாலசிங்கம் [இலங்கை இராணுவம்], அ. தவரட்ணம் [கனடா], திருமதி றெஜினா அன்ரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மா. ம. செபஸ்தியாம்பிள்ளை [ஓய்வு பெற்ற ஆசிரியை], திருமதி புஸ்பம் பாலசிங்கம், திருமதி றெஜினா தவரட்ணம் [கனடா], அன்ரன் ஆகியோரின் அருமை மாமியாரும், ம. சூசைப்பிள்ளை, திருமதி பெஞ்சமின், திருமதி க. மரியாம்பிள்ளை திருமதி மனோன் சபாரட்ணம், ம. மரியாம்பிள்ளை, ஆகியோரின் அன்புச் சகோதரியும், செ. மரியபுஸ்பம். J. மரீனா சத்தியதேவி, செ. சதா றெஜிமா, செ. வசீகரன், செ. ஜோய் வசிகுமார், செ. கொலின், பா. வித்தியானந்தர், பா. றூபகாந்தன், அ. அமுதாஜினி, த. எமில்டா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2-5-92 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி மா. ம. செபஸ்தியாம்பிள்ளை,
(மருமகள்)

17/2, மருதடி வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(20769)

### சிற்றம்பலம் ஈசுரபாதம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட சி. ஈசுரபாதம் 28-04-92 அன்று காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தனலக்சுமி (மதி), ஸ்ரீதரன் (கனடா), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தம் (சீமெந்துக் கூட்டுத்தாபனம் K. K. S) மாமனாரும், லக்ஷி, கஜந் ஆகியோரின் பேரனும், தணிகாசலம் [இளைப்பாறிய சிறைச்சாலை ஓவசியர்], கதிரவேலு [இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 30-04-92 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:,
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

248, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

[20784]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

### மேதின ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியை எடுத்துக் காட்டும் மேதினம், நாளை குடாநாட்டில் என்றும் நிகழ்ந்திராத பெரும் நிகழ்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மருதனார்மடத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிப் பேரணியும், யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் மிகப் பிரமாண்டமான கூட்டமும் நடத்துவதற்கும் பெரியளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

#### இரண்டு மணிக்கு ஆரம்பம்

மருதனார்மடம் சந்தியில் இருந்து நாளை பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும் பேரணியை ஓட்டி மருதனார்மடம் முதல் யாழ்ப்பாணம் வரை வீதி நெடுங்கிலும் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சிவப்பு, மஞ்சள், கொடிகளால் வீதிகள் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.

பேரணி மருதனார்மடம் சந்தியில் ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியால் வந்து கொக்குவில் சந்தியை அடையும். அங்கிருந்து பல்கலைக்கழக மைதானத்தை அடைந்து அங்கு மாபெரும் கூட்டம் நடைபெறும்.

விவசாயிகள், கடற்றொழிலாளர், கூட்டுறவாளர்கள், மற்றும் தொழிலாளப் பெருமக்கள், அரச ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் பெரும் திரளாக பேரணியில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய விடுதலைப் போராட்டத்தை உயிரோட்டத்துடன் பிரதிபலிக்கும் ஊர்திகளும், ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் எழுச்சியை எடுத்துக்காட்டும் ஊர்திகளும் பேரணியில் இடம்பெறும்.

[ஓ-3-5]

### தமிழர்கள்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் குறைந்தது 30 பேர் உயிரிழந்தனர் என்றும், மேலும் பல தமிழர்கள் படுகாயமடைந்தனர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இதனை மறுத்துரைத்து செய்ததாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

[ஓ-எ-5]

### பொலனறுவையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ அல்டி மிக்ஸ் எல். எம். ஜி. - 1
★ ரி-56 ரக துப்பாக்கி - 9
★ 40 மி. மீ. பிஸ்டல் - 1
★ வேட்டைத் துப்பாக்கிகள் - 4
★ றம் மகஸீன்கள் - 2
★ 40 மி. மீ பிஸ்டல் ஷெல்கள் - 24
★ ரி-56 மகஸீன்கள் - 48
★ 5.56 ரக ரவைகள் - 370
★ நடுத்தர ரவைகள் - 800
★ நேட்டோ ரவைகள் - 50
★ ஜே. ஆர் கிரனேட்டுகள் - 3
★ வெளிச்சக் குண்டுகள் - 2
★ தொலைத் தொடர்பு சாதனம் - 4

இந்தத் தாக்குதலின்போது இரண்டாம் லெப்டினன்ட் யோகராஜா [நடராசா புவனேந்திரன் - வாழைச்சேனை] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

[ஓ-5]

### காங்கேசன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனை முடிவுகள் தெரிந்த பின்னரே இது குறித்து மேற்கொண்டு தீர்மானம் எடுக்கப்படும். அது வரைக்கும் காங்கேசன் களஞ்சியத்திலிருந்து மா எடுத்து வரப்பட மாட்டாது. இப்போது இங்கிருந்து செல்லும் வாகன அணியில் அரிசி மட்டுமே ஏற்றிவரப்படுகிறது.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் பெருமளவு மா பழுதடைந்த நிலையில் உள்ளதாக அறியப்படுகிறது.

(அ-3)

### குண்டு வெடிப்பில் 13 பேர் பலி

புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் 13 பேர் கொல்லப்பட்டனர். குண்டு வெடித்த போது நான்கு மாடிக் கட்டடம் ஒன்று தரைமட்டமானது

### திருமலையில்.,.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வளைக்கப்பட்டதாகவும் அச்சமயங்களில் வீடுகளில் இருந்தவர்கள் வெளியே துரத்தப்பட்டு பல வீடுகள் சூறையாடப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையால் மக்கள் அங்கு பெரும் பதற்றத்துடனும் பயத்துடனும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராசா

கந்தையா நடராசா [முன்னைநாள் அஸ்பெஸ்டஸ் கம்பனி] 29-04-92 இல் காலமானார். இவர் மல்லிகா தேவியின் அன்புக் கணவரும் விஜயராகவன் [கனடா], அனுராதை, அனுஜியா, விஜயானந் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் 30-4-92 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வி. ரகுநாதன்

''கந்தவனம்ஸ்''
நல்லூர் மார்கட்,
யாழ்ப்பாணம்.

[20787]

### திருமதி சின்னையா மாரிமுத்து

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னையா மாரிமுத்து அரியாலையில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற காத்தி சின்னையாவின் அன்பு மனைவியும் கனகசபை, காமாட்சி, செல்லத்துரை, செல்வரெத்தினம் [ஆசிரியர் விக்கினேஸ்வரா வித்தியாலயம் நல்லூர்], நடேசன், காலஞ்சென்றவர்களான அமராவதி, நாகம்மா, கண்மணி, இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகமுத்து, தாமோதிரம்பிள்ளை, கனகம்மா, செல்வமலர், செல்வமலர் [செல்வா], புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, நாகேசு, பொன்னம்பலம், யோகம்மா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

இறுதிக் கிரியை இன்று அரியாலை முள்ளி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 5.30 மணிக்கு தகனக் கிரியைக்காக சித்துபாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. செல்வரத்தினம் (மகன்)

''கோமுகி''
முள்ளி வீதி,
அரியாலை.

[20788]

### திருமதி செல்லம்மா இராஜப்பா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா இராஜப்பா அவர்கள் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜப்பாவின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம் [மலேசியா], சிவநேசன், காலஞ்சென்ற தருமலிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம், பரமேஸ்வரி [உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நல்லூர்], மகேஸ்வரி [ரூபவாஹினி கூட்டுத்தாபனம்], இராஜேஸ்வரி [பொலிஸ் பணிமனை, வவுனியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன் [கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை], பகவதி, நிர்மலா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜீவா, சிவதீஸ், சஞ்ஜீவா, தரணி, சுரேஸ், ரமேஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை மாலை 4-00 மணியளவில் நாமகள் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

தகவல்
திருமதி பரமேஸ்வரன்

[20789]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org